பக்கங்கள்: எட்டு

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி

## VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 3 செவ்வாய்க்கிழமை (18-12-2001) தொலைபேசி: 3378 ஒலி 363

## ஆர்ப்பாட்டம் புரிந்த முஸ்லிம் மக்கள் மீது அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம்

### 50 பேர் படுகாயம் - மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சம்மாந்துறைப் பிரதேசத்தில், நேற்று முன்தினம் அப்பகுதிவாசிகள் சுட்டுக் கொல்லப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த முஸ்லிம் மக்கள் மீது விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சுமார் 50 வரை படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படையினரால் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்ட இருவர் நேற்றைய தினம் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனால் கிளர்ந்தெழுந்த மக்கள் ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், சடலங்களைப்பொறுப்பேற்கமாட்டோம் எனக்கூறி சம்மாந்துறைப் பொலிஸ்

[2ம் பக்கம் பார்க்க]

## தேசியக் கொடியைப் பறக்கவிடப் பணிப்பு

(கொழும்பு)

சகல அமைச்சு அலுவலகங்கள் அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் நாளை தேசியக் கொடியை பறக்கவிடுமாறு உள்நாட்டலுவல்கள் மாகாணசபை உள்ளூராட்சி அமைச்சர் அலிக்அலுவிகார வேண்டுகோள் விடுத்

(2ஆம் பக்கம் பார்க்க)

# பொதுஜன ஐக்கிய முன்னணி பிளவுறும் அபாயம்

# தேசிய அரசுக்கு ஆதரவு தராவிடில் 'கட்சித்தாவல்' சட்டம் நிறைவேறும்!

## பிரதமர் ரணில் கடும் எச்சரிக்கை

## பொ.ஐ.மு. இன்று அவசரமாக கூடுகிறது

(நமது நிருபர்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் தேசிய நல்லிணக்க அரசுஒன்றை அமைப்பதற்கு வழிவகுக்கும் வகையில் கட்சித்தாவல் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இப் பரபரப்பான சூழ்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக்குழு இன்றுகூடி தேசிய நல்லிணக்க அரசு அமைக்கப்படுவது தொடர்பாக ஆராயவுள்ளது.

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வுகாண்பதற்கு வசதியாக சர்வகட்சிகளும் இணைந்து தேசிய நல்லிணக்கஅரசு அமைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான பொதுஜனஐக்கிய முன்னணிக்கு ஒருமாத கால ரணில்விக்கிரமசிங்கா வழங்கியிருந்தார்.

ரணில் விக்கிரம சிங்காவின் தலைமையில் தேசிய நல்லிணக்க அரசுஒன்றை அமைத்து தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் ... ரிச்சாட் பத்திரன, பௌஸி, மகிந்த சமரவீரா ஆகியோர் உள்ளிட்ட 23உறுப்பினர்கள் ஆதரவு வழங்க முன்வந்துள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பதவி தந்தால் தேசிய அரசுக்கு ஆதரவு

### முன்னாள் அமைச்சர் பத்திரண

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசில் தனக்கொரு அமைச்சர் பதவி தந்தால், அதனைத் தான் ஆதரிப்பதாகவும், ஏற்றுக் கொள்வதாகவும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க அரசு சொன்று உருவாகுவதை ஆதரிக்கின்றேன். இன்னும் பல பொதுஜனஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய அரசை ஆதரிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்கள் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரையும் தம்முடன் இணைத்து ஆதரவைப் பலப்படுத்த முயற்சி செய்கின்றார்கள் என்றும் றிச்சட்பத்திரன கூறினார்.

இதேவேளை தேசிய அரசை அமைக்க முன்வரும் ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற

(8ஆம் பக்கம் பார்க்க)

# ரணிலின் இந் விஜயத்தை அடுத்து!

அரசுஒன்றை அமைப்பதற்கு வழிவகுக்கும் வகையில் கட்சித் தாவல் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இப் பரபரப்பான சூழ்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக்குழு இன்றுகூடி தேசிய நல்லிணக்க அரசு அமைக்கப்படுவது தொடர்பாக ஆராயவுள்ளது.

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வுகாண்பதற்கு வசதியாக சர்வகட்சிகளும் இணைந்து தேசிய நல்லிணக்க அரசு அமைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான பொதுஜனஐக்கிய முன்னணிக்கு ஒருமாத கால அவகாசத்தை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா வழங்கியிருந்தார்.

ரணில் விக்கிரம சிங்காவின் தலைமையில் தேசிய நல்லிணக்க அரசுஒன்றை அமைத்து தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர்களான ரிச்சாட் பத்திரன, பௌஸி, மகிந்த சமரவீரா ஆகியோர் உள்ளிட்ட 23 உறுப்பினர்கள் ஆதரவு வழங்க முன்வந்துள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசில் தனக்கொரு அமைச்சர் பதவி தந்தால், அதனைத் தான் ஆதரிப்பதாகவும், ஏற்றுக் கொள்வதாகவும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க அரசொன்று உருவாகுவதை ஆதரிக்கின்றேன். இன்னும் பல பொதுஜனஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய அரசை ஆதரிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்கள் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரையும் தம்முடன் இணைத்து ஆதரவைப் பலப்படுத்த முயற்சி செய்கின்றார்கள் என்றும் றிச்சட்பத்திரன கூறினார்.

இதேவேளை தேசிய அரசை அமைக்க முன்வரும் ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற

(8ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் இந். விஜயத்தை அடுத்து பேச்சு நடத்த புலிகளுக்கு அழைப்பு!

(கொழும்பு)

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும், விடுதலைப் புலிகளை சமாதானப்பேச்சுக்கு வருமாறு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுப்பாரென்று, ஐக்கிய தேசிய முன்னணியை மேற்கோள்காட்டி கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசிய முன்னணி பதவியேற்றதும் முதற்கட்ட நடவடிக்கையாக விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைப்போமென்று ஐ. தே. முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தது.

(8ம் பக்கம் பார்க்க)

முஸ்லிம்கள் படுகொலை சம்பவம்

## ஐந்து இராணுவத்தினர் நீதிமன்றில் நேற்று சரண்

(கொழும்பு)

தேர்தல்தினத்தன்று கண்டி மடவழப் பிரதேசத்தில் பத்து முஸ்லிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஐந்து இராணுவத்தினர் நேற்றுக்காலை பல்தெனிய நீதிமன்றில் சரணடைந்துள்ளனர்.

ஒரு அதிகாரியும் நான்கு இராணுவச் சிப்பாய்களும் தமது சட்டத்தரணிமூலமாக நீதிபதி சி, வி. ராஜபக்ஷ முன்னிலையில் சரணடைந்துள்ளனர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

இனப் பிரச்சினையைத் தீர்க்கும்

## ஐ.தே.கட்சியின் முயற்சிக்கு ஆதரவு பொ. ஐ. ஐ. முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் முக்கிய நான்கு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மக்கள் மயமான திட்டங்களையும் கொள்கைகளையும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அமுல்செய்யுமானால் பொதுஜன ஐக்கிய முன்னணி நிபந்தனையற்ற ஆதரவை வழங்குமென்று கட்சியின் ஊடகப்பேச்சாளர் மங்களசமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஊடகபபிரிவு செய்திக்குறிப்பொன்றைவெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டை பிளவுபடுத்தாமல் இனப்பிரச்சினையை தீர்க்க அரசு முற்படுமானால் பூரண ஆதரவு வழங்கப்படும்.

உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தி பொருட்களின் விலைகளை குறைத்து வேலைவாய்ப்பின்மையை போக்கி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த அர

(8ஆம் பக்கம் பார்க்க)

## 11 படையினரின் சேவை இடை நிறுத்தப்பட்டது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் புத்தளமாவட்ட முன்னாள் பிரதியமைச்சர் டி.எம். தஸநாயக்காவின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக பதினொரு படையினர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

முன்னாள் பிரதியமைச்சருக்கு ஆயுதம் வழங்கினார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

எட்டுப்படையினரும்மூன்று ஊர்காவல் படையினரும் இதில்அடங்குவதாக சிலாபம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி விஜி அபநாயக்க தெரிவித்துள்ளார். (ந 4)

நடுவு நிலை தவறா. நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**SPOKEN ENGLISH**

சுலபமான அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, கதைக்கப் பயில. தபால் மூலமும் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (வார இறுதி மாலை வகுப்புகள்). (4086)

### தவறிவிட்டது

சோதி வீதி, காங்கேசன்துறை எனும் முகவரியையுடைய கந்தையா பாமினி என்பவருடைய தே. அ. அட்டை, விசேட அடையாள அட்டை [இல 0907000925] பாடசாலை அ. அட்டை என்பன வல்லைக்கும் குஞ்சர்கடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [4088]

### உடன் தேவை

பாவித்த நல்ல நிலையிலுள்ள அலுவலக கதிரைகள் உடன் தேவை தொடர்பு விளம்பர இலக்கம்;-100 வலம்புரி இல15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்.


# சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளின் கதையை நம்பி தமிழ் மக்கள் தவறிழைத்துவிட்டனர்

## புதிய ஜனநாயகக் கட்சிசெயலர் செந்திவேல் கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இத் தேர்தலால் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள். ஒரு பிசாசினை விரட்டுவதற்கு இன்னொரு பிசாசினைக் கொண்டுவந்த கதைதான் இன்று நடந்திருப்பது. தமிழ்மக்களுக்கு ஐ. தே. க எந்தவொரு உரிமையும் மனமுவந்து தரப்போவதுமில்லை தருபவர்களை விடப்போவதுமில்லை சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளின் கதையை நம்பி தமிழ் மக்கள் தவறிழைத்து விட்டனர் என்பதே உண்மை.

கடந்த ஞாயிறன்று புதிய ஜனநாயகக் கட்சியின் பகிரங்கச் சொற்பொழிவின் போது அக்கட்சியின் செயலர் சி;கா செந்திவேல் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர்தொடர்ந்துஉரையாற்றும் போது

தமிழர் கூட்டமைப்பும்யாழ்ப்பாணத்தில் போட்டியிட்ட ஏனைய அரசியல் கட்சிகளும் மக்களுக்கு விடுத்த வாக்குறுதிகள் ஞாபகம் இருக்கலாம் புலிகள்மீதான தடைநீக்கம் பற்றியும் 45 நாளைக்குள் பாதை திறப்புப் பற்றியும் சூடுபறக்கும் பிரசாரங்களை நடத்திய அரசியல் வாதிகள் இன்று தென்னிலங்கையிலே சுகபோக வாழ்வை மேற்கொண்டு வருகின்றனர்

எவர்கள் கள்ளவாக்கு போடாதீர்கள் என அதற்கு எதிராக குரல் எழுப்பினார்களோ அவர்ளே அதிக கள்ளவாக்கு போட்டமை வேதனைக்குரிய விடயம

இன்று பெரும்பான்மைபலத்துடன் ஆட்சிப்பீடமேறி இருக்கும் சக்தியான ஐ தே.கவின் கடந்தகால வரலாறு கறைபடிந்தது.

ஐ தே.க. தமிழர் பிரச்சினையில் உளச்சுத்தியான கொள்கையை என்றுமே கடைப்பிடிக்கவில்லை கடைப்பிடிக்கப்போவதுமில்லை.

உண்மையில் ஐ தே. க. தமிழர் இனப்பிரச்சினையில் செர்க்க் கொள்கையுடன் நடக்கவில்லை; ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளின் தூண்டிதலின்பேரிலே ஆட்சிநடத்துகிறது. காரணம் இன்று ஐ தே .க சார்பாக ஆட்சிப் பீடம் ஏறியவர்கள் முதலாளித்துவ போக்குடைய அரசியல் வாதிகளே.

எனவே சாதாரண மக்களின்நடைமுறைப் பிரச்சினைகளும் யுத்தத்தின் மூலமான பாதிப்புகளும்தற்போதுஆட்சிபீடமேறியுள்ள அரசியல்வாதிகளைச் சென்றடையவில்லை.

ரணில் விக்கிரமசிங்கா ஆட்சிபீடமேறியதும் இந்தியாவிடம் சென்றுஆலோசனை கேட்கவுள்ளார்,

ஆனால் இந்தியா தமிழர் பிரச்சினை பற்றி ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதையும் இன்றுவரை மேற்கொள்ளவில்லை. தனது ஏகாதிபத்திய நலனுக்குச் சாதகமான முயற்சியையே செய்துவருகின்றது.

காலத்துக்குக்காலம் தனது நேரடிமற்றும் மறைமுக கொள்கைகளாலும் தமிழர் போராட்டத்தை சிதைத்து விடுவதையே இந்தியா மேற்கொண்டுவருகின்றது:

எனவே ரணில் விக்கிரமசிங்காவின் இந்திய நாட்டு விஜயமும் இந்தியாவின் கொள்கைகளும் இனிவரும் நாட்களின் ஐ.தே. க. போலிமுகத்திரையைக் கிழித்தெறியப்போகின்றன.

தமிழர் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அவர்கள் அன்றிலிருந்து இன்றுவரை உருப்படியாக எதையும்தமிழ் மக்களுக்கு செய்யவில்லை; அன்று தமிழர் கூட்டணியின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் தான் இன்று தமிழரின் அவலநிலைக்கு காரணம்

மக்களுக்கு இது நன்றாகத் தெரியும். காலம் காலமாக அரசிற்கு முண்டுகொடுத்தலும் தமிழரின் உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதப்போராட்டமாக உலக நாடுகளுக்கு சித்திரித்தலும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தினை நசுக்கி அதன் மூலம் ஒரு அரைகுறைத் தீர்வுப்பொதியை தமிழ்மக்களின் மேல்திணிந்து உரிமைக்காக போராடுபவர்களை நலிவடையச் செய்வதிலும் பெரும்பங்கு வகித்தவர்கள். இன்று மக்கள் மத்தியில் தம்மைத் தமிழ்தேசத்து இரட்சகர்களாக காட்டிக்கொள்கின்றனர்.

தேர்தலின் பின் கூட்டணியினர் இந்தியாவைத் தமது உற்ற தோழனாக ஆக்குவதற்கு கடும்பிரயத்தனங்களை மேற்கொண்டுவருகின்றனர். ஆனால் இந்தியாவோ தனது ஏகாதிபத்திய விஸ்தரிப்புக் கொள்கைக்காக இவர்களை பயன்படுத்தப்போகிறது:

காலப்போக்கில் இக் கூட்டணியினர் இந்தியாவின் ஏஜெண்டுகளாகவே தொழிற்படப்போகின்றனர். என்பதே உண்மையாகும்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் எந்தவொரு பாராளுமன்றச்செயற்படும் தமிழர் உரிமைகளைப் பெற்றுத்தரப் போவதில்லை. எனவே மக்கள் வெகுஜனப் போராட்டத்தின்மூலம், தமது சுயநிர்ணய உரிமையை சர்வதேச உலகிற்கும் தென்னிலங்கை சிங்கள பேரினவாதிகளுக்கும் உணர்த்துவதன் மூலமே உண்மையான இன ஒடுக்குதலை உடைத்தெறிய முடியும் என்று தெரிவித்தார். (உ-19)

### உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கிடையே நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை 19 ந் திகதி 4 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளைய ஆட்டத்தில் டலாலி ஆசிரியர் கலாசாலை அணியை எதிர்த்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அணிமோதவுள்ளது. [இ]

### மின் தாக்கி குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்.)

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதற்கு முற்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரம் தாக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை கொக்குவில் கிழக்கில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான முத்துலிங்கம் வசந்தன் (வயது-21)என்பவரே உயிரிழந்தவராவர். (இ-104)

# பேச்சுவார்த்தை வெற்றி அடைய யுத்த நிறுத்தம் அவசியமாகும்

## மலையகத் தொழிற்சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமையவேண்டுமானால் பரஸ்பரம் நம்பிக்கை தோன்ற வேண்டும். இதற்கு யுத்தநிறுத்தம் மிக அவசியமானதாகும். இவ்வாறு மலையகத்தைச்சேர்ந்த மூன்று தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் கூட்டாக கோரியுள்ளன.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் குறித்த ஒரு காலப் பகுதிக்கு போர்நிறுத்தம் ஒன்றை அறிவித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென விவசாயத் தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஆர்; என். கிருஸ்ணசாமி கேட்டுள்ளார்.

இந்த விடயத்தில் நாட்டு மக்களும் பொதுஸ்தாபனங்களும் அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

ஐக்கிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் ஏ. முத்துலிங்கம் கருத்துத்தெரிவிக்கையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் காலப்பகுதியில் மோதல்களை தவிர்ப்பதற்கான இணக்கப்பாட்டுடன் நடந்து கொள்ளாவிட்டால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவது கடினம். எனவே மோதல்களை தவிர்ப்பது தொடர்பான உடன்பாடொன்றுக்கு வருமாறு அவர் இருசாராரையும கேட்டுள்ளார்,

இது குறித்து இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரசின் தலைவர் எம். எஸ்: செல்லச்சாமி கருத்துத்தெரிவிக்கையில் கடந்த காலத்தைப்போல் அல்லாது பேச்சுவார்த்தைகள் முறிவடையாது இருதரப்பினரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இந்தியா உட்பட ஏனைய மேற்குலக நாடுகளின் உதவியின் மூலம் உடன்படிக்கையை உருவாக்கி யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென செல்லச்சாமி கேட்டுக்கொண்டார்; (ந-4)

### ஆர்ப்பாட்டம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம்முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், ஆத்திரத்தில் பேருந்து ஒன்றையுமகொளுத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரைக் கலைக்க அங்கு வந்த விசேட அதிரடிப்படையினா ஆர்ப்பாட்டம்செய்த பொது மகக்ள்மீதுகண்மூடித்தனமானதுப்பாக கிப் பிரயோகம் மேற்கொண்டதிலேயே மேற்படி 150 பேரும் படுகாயமடைந்தனர்;

இதேவேளை கொல்லப்பட்ட சகோதரர்களான வீரமுனையைச் சேர்ந்த ஆதம் பாவா நஷீர் (வயது28) ஆதம்பாவா ரஷீவ் (வயது 35) ஆகிய இருவரிடமிருந்தும் கைக்குண்டுகள், கைத்துப்பாக்கிகள் என்பனவற்றை தாம் மீட்டெடுத்ததாகவும் மேற்படி இருவரையும் தாம் அழைத்துவரும்போது புலிகள் இயக்கததவரே சுட்டுக் கொன்றதாவும் விசேட அதிரடிப்படையினர் அறிவித்துள்ளனர்.

இதுஇவ்வாறிருக்க ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதியில் பதற்றம் நிலவுவதுடன் மேலதிக பாதுகாப்பு படையினரும் அங்கு பாதுகாப்புபணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (உ)

### ஐந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கொலை தொடர்பாக முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தேயின் புதல்வர்களான றொகான் ரத்வத்தே சானக ரத்வத்தே ஆகியோரை சீ; ஐ. டி. பொலிசார் வலை விரித்து தேடிக்கொண்டிருக்கும் சமயத்தில் இவர்கள் சரணடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ந-4)

# ஆப்கானை ஆக்கிரமிக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு அறவே கிடையாது

[காபூல்]

ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து அதனைத் தன்வசப்படுத்திக்கொள்ளும் எண்ணம் அமெரிக்காவுக்குஅறவே இல்லையென அமெரிக்க வெளியுறவு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்மல்பீட் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், அந்நாட்டின் இடைக்கால அரசுத் தலைவரான ஹமீட் ஹஸாயை சந்தித்து உரையாடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

அமெரிக்கப்படைகள்பயங்கரவாதத்தைஅடித்துவிரட்டும் அல்லது அழித்தொழிக்கும் ஒரேநோக்கத்துடனேயே ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ளன என்றார்.

ஆப்கானிஸ்தானின் தலிபான்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்ததையிட்டு அமெரிக்காவுக்குநன்றி தெரிவிப்பதாகவும் ஹமீட் ஹஸாய் தெரிவித்தார்

ஆப்கானிஸ்தானின் காபூல் நகருக்கு வடபகுதியிலுள்ள விமான நிலையம் ஒன்றில் வந்திறங்கிய அவர் அமெரிக்க படைவீரர்களுடனும் உரையாடினார் தலிபான் அரசு வீழ்ச்சியடைந்த பின்னர் அமெரிக்க உயரதிகாரிஒருவர் அங்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடவையாகும். (உ-5)

### பன்மொழிப் புலவர் அப்துல் லத்தீப் காலமானார்

(சென்னை)

இந்திய தேசியலீக்கட்சியின் பொதுச்செயலாளரும் வாடியம்பாடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான பன்மொழிப்புலவா எம். ஏ. அப்துல் லத்திப் நேற்றுக்காலை மாரடைப்பால்காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 66.

இருதய நோய் காரணமாக சென்னை பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருந்த அவர் அங்கு காலமானார்.

காலஞ்சென்ற அப்துல் லத்திப் 5 தடவைகள் மாநில சட்டப்பேரவையின் உறுப்பினராக இருந்துள்ளார். இவர் பேரவையின் தற்காலிகத் தலைவராகவும் பதவிவகித்தவராவார். (வ)

### இஸ்ரேல் மீதான தாக்குதலை நிறுத்துமாறு அரபாத் அறிவிப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேல் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு பலஸ்தீன அதியர் யசீர் அரபாத் தனது படைகளுக்கு அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீதுதற்கொலைத் தாக்குதல் நடத்தி வரும் பலஸ்தீனத்திற்கு ஆதரவான குழுக்கள் தற்கொலைத்தாக்குதலையும் மற்றும் தொடர் தாக்குதலையும் உடன் நிறுத்த வேண்டுமென்றும் அரபாத் கேட்டுள்ளார்;

இதேவேளை, இஸ்ரேல் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு யசீர் அரபாத் பலஸ்தீனரைக் கேட்டுக் கொள்ளவில்லையென்றும் யுத்தத்திற்கு இன்னும் ஊக்குவிப்பளிக்கிறார் என்றும் இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

### தேசியக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துளவார்;

புதிய பாராளுமன்றம் கூடும் இத்தினத்தில் தேசிய ஒற்றுமை சமாதானம் நாட்டின் ஒருமைப்பாடு என்பவற்றை பேணும் நோக்கிலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-4)

## நல்லிணக்க அரசமைக்கும் பிரதமர் ரணிலின் முயற்சிக்கு

# சமாதான பேரவை வரவேற்பு

(கொழும்பு)

புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முன்னர். ஜனாதிபதியும் பாராளுமன்றமும் இருதரப்பு கருத்தொருமிப்புக்கு வரவேண்டும் என தேசிய சமாதானப் பேரவை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

பல்லினச் சமூகமொன்றில் பகைக் கட்சிகளைச் சேர்ந்த ஜனாதிபதியும் பாராளுமன்றமும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் நிலையில் நாட்டின் எந்தப் பகுதியிலும் எந்தத் தரப்பும் 100 வீதமான அதிகாரத்தைத் தன்வசயில் வைத்திருத்தல் இயலாது.

தேசிய நல்லிணக்க அரசொன்றை நிறுவ முன்வந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தை, தேசிய சமாதானப் பேரவை வரவேற்கின்றது.

ஜனாதிபதியும் அவரது பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமது கடந்த காலத் தவறுகளையும் நிகழ்காலத்தின் தாற்பரியங்களையும் நன்குணர்ந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி புதிய அரசாங்கத்துடன் சேர்ந்து இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை ஈட்டுவதற்கு ஒத்துழைப்பு நல்குவாரென்பது எமது நம்பிக்கையாகும்.

இதில் பொறுப்பும் மதிப்பும் இருதரப்பையும் சாரும் என்று மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## மாற்றப்பட்ட பரீட்சை நிலையங்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்து வலிகாமம் பிரதேசத்தில் இயங்கும்தென்மராட்சிப் பாடசாலைகளின் பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அவரவர் அனுமதி அட்டை வழங்கப்பட்ட பரீட்சைநிலையங்கள் சில மாற்றப்பட்டுள்ளன

பரீட்சார்த்திகள் உரிய மாற்றங்களைஅவதானித்து அந்தந்த இடங்களில் சென்று பரீட்சை எழுதும் படி தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்:

★ இணுவில் மத்தியகல்லூரி மண்டப இல1 - மருதனாமடம் இராமநாதன் கல்லூரிக்கும்

★ இணுவில் மத்தியகல்லூரி மண்டப இல2 - மருதனாமடத்தில் இயங்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும்

★ நாவற்குழி. ம. வி பரீட்சை மண்டபம் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளது இதேவேளை கைதடி முத்துக்குமாரசாமி ம. வி. பரீட்சை மண்டபத்தில் மாற்றமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பரஸ்பரம் நம்பிக்கையின் அடிப்படையிலான யுத்த நிறுத்தத்தைதோட்டத் தொழிலாளர் சங்கங்கள் வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டுமானால் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையிலான யுத்தநிறுத்தம் அவசியம்என மூன்று தோட்டத்தொழிலாளர் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

குறித்த காலப்பகுதிக்கிடையில் இருதரப்பினரும் உடன்பாட்டு ரீதியில் போர்நிறுத்தம்செய்து. பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கு நாட்டுமக்களும் உயர்ஸ்தாபனங்களும் அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும் என மேற்படி தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் கேட்டுக்கொண்டுள்ளன.

ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கச் செயலாளர் முத்துலிங்கம் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், பேச்சுவார்த்தைகளின் போது, மோதல் தடுப்புக்களை இருதரப்பினரும் கடைப்பிடிக்காவிட்டால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவது கடினம் எனத் தெரிவித்துள்ளார்

இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம். எஸ் செல்லச்சாமி, கடந்த காலங்களைப்போல் அல்லது பேச்சுவார்த்தை முறிவடையாது இருக்க வேண்டுமானால் இருதரப்பும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்குலக மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் உதவியுடன் சர்வதேச உடன்பாட்டடிப்படையில் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. (உ)

## லான்மாஸ்டர் ஏறியதில் குடும்பஸ்தர் நசியுண்டு மரணம்

(யாழ்ப்பாணம்)

லான்மாஸ்ரரும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் வந்தவர் மீது லான்மாஸ்டர் சில்லு ஏறியதில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் சுன்னாகம் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த விநாசித்தம்பி ஜெகசோதி (வயது48) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-104)

## பௌத்த பிக்கு வசமிருந்து கைத்துப்பாக்கி மீட்பு

(கொழும்பு)

பௌத்த பிக்கு ஒருவரிடம் இருந்து 18 ரக பிஸ்டல் ஒன்றும் அதற்கான சன்னங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டிக்கருகிலுள்ள பௌத்த விகாரையொன்றில் வசித்த பிக்கு ஒருவரிடம் இருந்தே பொது மக்கள் கொடுத்த தகவலின் பேரில் இவை கைப்பற்றப்பட்டன வென்றும்.

மேலதிக விசாரணைகள் தொடர்வதாகவும் கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## வன்முறைகள் தொடர்பாக கடும்நடவடிக்கை எடுக்க கோருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

தேர்தலுக்குப பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டவன்முறைகள தொடர்பாககடுமையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுள்ளார்:

ஜனாதிபதி மாளிகையில் பொதுஜன ஐக்கியமுன்னணியின் சிரேஷ்டஉறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் போதேஅவர் இந்த கோரிக்கையைவிடுத்துள்ளார்.

தேர்தல் முடிந்த பின்னரே நூற்றுக்கும் அதிகமான எமது ஆதரவாளர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இது குறித்து பொலிஸார் எதுவித விசாரணைகளையும் மேற்கொள்ளாது அசமத்தப் போக்கில் செயற்படுவதாக ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார்;

இதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமக்கு பாதுகாப்பு வழங்குவதில் பொலிஸார் அக்கறையில்லாது செயற்படுவதாக ஜனாதிபதியிடம் முறையிட்டதாகவும் தெரிய வருகிறது. (உ-5)

## வன்னிக்கான வாக்குச் சீட்டுக்கள் குப்பைத்தொட்டியில் மீட்பு

(வவுனியா)

வன்னிக்கென அச்சிடப்பட்ட பெருந்தொகையான வாக்குச் சீட்டுக்கள்வவுனியாவில் பஸ்நிலையத்திற்கு அருகில் உள்ள குப்பைக் கூடை ஒன்றினுள் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை நகர்சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நகரை சுத்தம்செய்த வேளை குறிப்பிட்ட ஒருசின்னத்திற்கு புள்ளடியிடப்பட்ட நிலையில் வாக்குச் சீட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற 12ஆவது பொதுத் தேர்தலின் போதுபயன்படுத்துவதற்காகஇவ்வாக்குச் சீட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றுபொலிஸார் தெரிவித்தனர். (உ-7)

## உடலில் நோய்..

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

களாக,அல்லது நோயின் அறிகுறிகளாக உணர்கிறோம்.

### உபாதைகள் நோயல்ல

உடலில எதர்பபு சக்தியானது நல்லநிலையில் இருக்கும் வரை கண்டிப்பாக உடலில் உபாதைகள் இருக்கும். உடல் உபாதைகள் இருக்கும் வரை தான் உடல் பாதுகாப்பான நிலையில் இருக்கிறது என்று பொருள். அதாவது நோய் எதிர்ப்புசக்தியானது நல்ல நிலையில் இருக்கிறது என்று பொருள.

உதாரணமாகஉடல்வலியோ தலைவலியோ ஜுரமோ, அல்லதுஉடலில் எந்தஒருபகுதியில் அரிப்போ, சின்னக்கொப்புளங்களோ ஏற்பட்டால் அவைநோய் எதிர்ப்புசக்தியின் வெளிப்பாடாகும்.ஆனால்ஆங்கில மருத்துவம் இவ்வறிகுறிகளை நோயாகவேகருதி அந்த அறிகுறிகளை அழிக்க முற்படுகிறது. அதாவது நோயை குணப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, ஒவ்வொரு உபாதைக்கும், ஒரு மருந்து கொடுக்கும்போது நோய் எதிர்ப்பு சக்தியின்குறிப்பிட்ட ஒரு அங்கத்தை முறியடித்து விடுகிறது.

இவ்விதம் நோய் எதிர்ப்பு சக்தி பலவாறாக ஒடுக்கப்பட்டத்தைத் தொடர்ந்து நோய் எதிர்ப்பும் அடங்கி விடுகிறது; நோயின அறிகுறிகளும் அடங்கிவிடுகின்றன. ஆங்கில மருந்துகள் உட்கொள்ளும் போது உடல் உபாதைகள் குறைவதற்கு இதுவே காரணம்:

உடல் எதிர்ப்புச் சக்தி ஒடுக்கப்படும் போது, இதன் மூலம் உடல் உபாதைகள் குறையும் போது,நோயின் தீவிரம் எந்த விதமான எதிர்ப்பும் அற்ற நிலையில் வேகமாக வளர ஆரம்பிக்கிறது. ஆங்கில மருத்துவம் வளர்ச்சியடைவதற்கு முன்பாகநோய்கள் மிகக்குறைவாக இருந்தன.குறிப்பாகஇப்பொழுது சிறுவயதினரிடையே அதாவது 20 முதல் 40 வயதுக்குட்பட்டவரிடையே இரத்த அழுத்தம், இருதய நோய்,சிறுநீரக நோய், சர்க்கரைநோய், போன்ற பெரும் நோய்களைப் பார்ப்பது விரல் விட்டுஎண்ணிவிடக்கூடிய அளவுக்குகுறைவாகஇருந்தது.இருபது முப்பது வயதுகளில்இருக்கக்கூடியவர் மூட்டு வலிக்கிறது என்று வெளியில் சொன்னால் "அதற்குள் கிழவனாகிவிட்டாயா?" என்று மற்றவர்கள் எள்ளி நகையாடக்கூடிய காலமாக இருந்தது, அதாவது ஆங்கிலமருத்துவத்தின் ஆரம்பகாலக்கட்டங்களில்ஒவ்வொரு நோயும் இயற்கையாக தானே குணமடைந்து வந்தது.

ஆங்கில மருத்துவ வளர்ச்சியில் உடல் உபாதைகளைக் குணமாக்குவதைத் தவிர்த்து, அவற்றைத் தற்காலிகமாக நீக்குவதையே குறிக்கோளாகக்கொண்டு உடலின்எதிர்ப்பு சக்தியை அழித்துவிடும் முயற்சியில தீவிரமாக இறங்கியதன் விளைவு? இன்று எய்ட்ஸ், நாளை, நாளை மறுநாள் இன்னும், இன்னும் பயங்கரமான இனம் புரியாத நோய்கள் நிச்சயமாக வந்து கொண்டே இருக்கும்.

இன்று உடலின் எதிர்ப்பு சக்தியை அழித்து எய்ட்ஸ் ஐப போன்று அல்லது அதைவிட கொடுமையான நோயை ஏற்படுத்தக்கூடிய மருந்துகள்.

1 Anti-Inflammatory Drugs (உடலில்காயத்தையும், வீக்கத்தையும் வலியையும் குறைக்கக்கூடிய மருந்துகள்)

2 ஜுரத்தைக் குறைக்கக்கூடிய மருந்துகள்; (எவ்வாறு என்பதன் விளக்கம், இதே இதழில் "கொடுமையான நோய்களுக்கு ஜுர மாத்திரைகளே காரணம்" என்ற தலைப்பில் தொடர் கட்டுரையாக வெளிவந்து கொண்டிருக்கிறது.)

3 கார்டிஸோன் (Cortisone) 'எய்ட்ஸ்' நோயை ஆங்கில மருத்துவம் மட்டுமே (நிச்சயமாக ஆங்கில மருத்துவம் மட்டுமே தான் காரணம்) உருவாக்கியிருக்கிறதுஎன்பதற்கான ஆதாரத்திற்கு 'கார்டிஸோன்' [ ortisone] என்ற இந்தமருந்து ஒன்றே போதும். உடலில் எந்தமூலையில் உள்ள ஒரு எதிர்ப்பு சக்தியையும் நிர்மூலமாக்கும் கொடூரமான மருந்தாகும்.

4 'சைக்லோஸ்போரின்' (Cyclospo in) என்ற உடலின் எதிர்பபு சக்தியை அழிக்கப் பயன்படுத்தப்படும் மருந்து.

5 Anti Allergic (Incidal Actifed) போனற சாதாரண மூக்கடைப்பு,உடலில் அரிப்பு, ஜலதோஷம்போன்றவைகளுக்காக உபயோகப்படுத்தப்படும். மருந்து வகைகள் உடலின் நோய், எதிர்ப்புசக்தியின்ஒரு குறிப்பிட்ட பிரிவை அழிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

ஆங்கில மருத்துவத்தின் வளர்ச்சியே இந்த மருந்து வகைகளைச் சுற்றித் தான சுழன்று கொண்டிருக்கிறது ●

## சந்திரிகாவின் சம்மதமில்லாத ரணிலின் சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமானதாய் அமையுமா?

### மேற்குலக ராஜதந்திரிகள் சந்தேகம்

(கொழும்பு)

சமாதான முன்முயற்சியாக புதிய பிரதமர்ரணில்விக்கிரமசிங்க இந்தியா செல்லத்திட்டமிட்டிருப்பது எந்தளவுதூரத்திற்குப் பயன்மிக்கதாய்அமையும் என்பதுகுறித்துமேற்குலக ராஜ தந்திரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பிரதமர் ரணில் நோர்வேயின் சமாதான முயற்சிக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் இந்தியாவின் நிலைப்பாட்டை நாடிபிடித்தறியும் நோக்கில் இவ்வாரம் புதுடில்லி செல்லவுள்ளார்.

சர்வஅதிகாரங்களும் பொருந்திய ஜனாதிபதியாக சந்திரிகா உள்ள நிலையில்,அவரது உடன்பாடெதுவும் இன்றி மேற்கொள்ளும் இப் பயணம் பயன் மிகுந்ததாய்அமையாது என நோக்கர்கள் முன்கூட்டியே தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதே வேளை, ரணிலின் இந்தப் பயணம் குறித்தோ, சமாதான முயற்சிகள் குறித்தோ ஜனாதிபதிஎவ்வித கருத்தும் வெளியிடாத நிலையையும் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ)

## மின்சாரம் தாக்கி இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு மின் இணைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞன், மின்தாக்கி அந்த இடத்திலேயே மரணமான சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது:

கொக்குவில் நந்தாவிலைச் சேர்ந்த முத்துலிங்கம்வசந்தன் (வயது 20) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்; (உ-10)

# சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருக்கும்

# 20 ஆயிரம் பேருக்கு பொது மன்னிப்பு

## அவற்றைக் கையளித்தால் மாத்திரம்

(கொழும்பு)

வன்முறைகள் அதிகரித்து நாட்டில்ஒழுங்கும் சட்டமும் குலைந்து போயுள்ள நிலைமையை சீர் செய்யும் நோக்கில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகளை வைத்திருக்கும் சுமார் 20000 பேர்கள் அவற்றைகையளித்தால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கு புதிய உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

10 ஆயிரத்திற்குமதிகமான ரீ.56 துப்பாக்கிகளும் 10 ஆயிரத்திற்குமதிகமான 9.மி.மீ. பிஸ்டல்கள் மற்றும் கிரனேட் போன்றவையும் கிரிமினல்களிடம் இருப்பதாக பொலிஸார் தனக்குதெரிவித்திருப்பதாகவும் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சில ஆயுதங்கள் அதிகார மற்ற வகையில் அரச நிறுவனங்களால் சிலருக்கு வழங்கப்பட்டும் ஒரு தொகை ஆயுதங்கள் ஆயுதப்படையினரிடமிருந்துதிருடப்பட்டும்வேறு ஒரு தொகை ஆயுதங்கள் உத்தியோகபூர்வமான முறையில் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு அரசின் ஆதரவாளர்களுக்கும் பாதாள உலகத்தினருக்கும் வழங்கப்பட்டும் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதுபற்றி பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவை அழைத்து சட்டத்தையும் ஒழுங்கையும் மீண்டும் நிலை நாட்டுவதுபற்றி ஆலோசித்துள்ளார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க இதுபற்றித் தெரிவிக்கையில், பொதுமன்னிப்புக் காலம் முடிவடைந்ததும்தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்றும் இதற்கென தனியான குழுவொன்று செயற்படும் என்றும்தெரிவித்தார்.

வெளிக்களப்படைத் தலைமையகத்திற்கு வழங்கப்பட்ட 300,ஒன்பது எம்.எம். துப்பாக்கி தேர்தலுக்கு ஒருசில வாரத்திற்கு முன் காணாமல் போயிருந்ததாகவும், பெற்றோலியம் கூட்டுத்தாபனம் இறக்குமதி 400,ரீ-56ரக துப்பாக்கிகளும்உரியபாவனைக்கு பயன்படவில்லை என்றும், இராணுவ விட்டோடிகளும் ஆயுதங்களை விற்றனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# இராசி பலன்

18/12/2001
(மார்கழி 3. செவ்வாய் சதுர்த்தி பி.இ. 5.54 வரை உத்தராடம்மு.ப. 7.18வரை ராகுகாலம் 3 23 - 4 53 சுபநேரம் 10.53 - 12 23 சித்தம், சதுர்த்தி விரதம்

**மேடம்**
தொழில் சிறப்பு, பிறர் உதவி. முயற்சி கைகூடும், நல்ல செய்தி.

**இடபம்**
மனப்பதற்றம், வயிற்றுக் கோளாறு, கடின முயற்சி புதிய திட்டமிடல்.

**மிதுனம்**
உறவினர் வெறுப்பு. பிரயாண பயம், காரியக் கஷ்டம், உடல் வியாதி.

**கடகம்**
பிரயாண சுகம், போசன சுகம். காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி.

**சிங்கம்**
தொழில் விருத்தி. உடல் நலம், முயற்சி நிறைவேறும், சத்துரு ஜெயம்.

**கன்னி**
தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு. தனவரவு. மனச் சஞ்சலம்.

**துலாம்**
மாணவர் கல்விச் சிறப்பு. அற்பர் உறவு, இனசனத் தொடர்பு, தன்னம்பிக்கைக் குறைவு.

**விருச்சிகம்**
காரிய அனுகூலம், சகோதரர் உதவி, தனவரவு. அந்நியர் சந்திப்பு;

**தனுசு**
மாதர் நட்பு. கௌரவக் குறைவு, பொருள் விரயம், விவாதம்.

**மகரம்**
பெரியோர் மதிப்பு, நல்ல முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, காரிய ஜெயம்.

**கும்பம்**
காரிய அலைச்சல், சுப செலவு. நித்திரைக்குறைவு, பிரயாணம்.

**மீனம்**
தொழில் சிந்தை, காரியம் நிறைவேறும், பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி;

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

-வளவன்

# பருவமழை போதாது விவசாயிகள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றினால் எதிர்பார்த்தளவு மழைபெய்யாததால் ஆயிரக்கணக்கான ஏக்கர்நெல் வயல்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன;

நவம்பர், டிசம்பர் மாதங்களில் கிடைக்கும் வழமையான மழைவீழ்ச்சிஇதுவரைகிடைக்கவில்லை. இருப்பினும் இரவு வேளைகளில்கடும்பனி பெய்து வருகிறது.

இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, மழை வேண்டி அண்மையில் மாபெரும் பிரார்த்தனையும் இடம் பெற்றது. (உ-7)

### மத்திய கிழக்கு இலங்கைத் தூதரகத்தில்

# தஞ்சமடைந்த பெண்கள் விரைவில் அழைத்து வரப்படுவர்

[கொழும்பு]

மத்திய கிழக்கிற்கு வேலை வாய்ப்பிற்கென சென்று அங்கு பல்வேறு பிரச்சினைகளுக்குள்ளாக்கப்பட்டு அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கைப் பெண்கள் அடுத்த 6 மாதத்திற்குள் நாட்டுக்கு அனுப்பப்படுவர் என்று தொழில், மற்றும் தொழில வழங்கல் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, குறிப்பிட்ட அதிகாரிகளுடன் அடுத்த வாரம் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகவும் அப்பேச்சுக்களின் போது தனிப்பட்ட பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-7)

### தவறவிட்ட அடையாள அட்டைகள்

# 'வலம்புரி' அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

[யாழ்ப்பாணம்]

பல்வேறு இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட பின்வருவோரின் தேசிய மற்றும் விசேட அடையாள அட்டைகள் 'வலம்புரி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சபாரத்தினம் சிற்றம்பலம்-கரையூர் குடத்தனை, ஆறுமுகத்தான் சிவலன்-பொற்பதி வீதி கொக்குவில், மாரிமுத்து நவரத்தினம்-அளவெட்டி எமில்நகர், மன்னார், இராஜரட்ணம் பாலச்சந்திரன்-றெக்கிளமேசன் வீதி, குருநகர்

மாணிக்கம் தர்மராஜா-அந்திரான் சண்டிலிப்பாய், அருளம்பலம் வரப்பிரகாசம்-ஈச்சமோட்டை யாழ், தவமணி விஜயரத்தினம்-வீமன்காமம், வலிகாமம் வடக்கு, நாகேஸ்வரி தருமரத்தினம்-பெரியவிளான், வலி தென் மேற்கு. பாலச்சந்திரன் சோமசுந்தரம்-பெருங்குளம் பிள்ளையார் கோவிலடி சாவகச்சேரி, இராசநாயகம் சரஸ்வதி-சரசாலை வடக்கு, காந்திமதி மனோகரன்-சபாபதி வீதி, வண்ணார்பண்ணை, மேரி றோஸ்மலர் அன்ரனி இம்மானுவேல்-ஒட்டகப்புலம் வசாவிளான்;

கந்தையா முத்துத்தம்பி-ஈவினை, புன்னாலைக்கட்டுவன் தெய்வநாயகி பொன்னம்பலம் - 3/5, பெரியவிளான், பரிமளம் சண்முகம்-புலோப்பளை மேற்கு.

முத்தையா விஜயலக்சுமி-14. வெள்ளாந் தெரு, பத்மநாதன் சசிமாலா-கோண்டாவில் கிழக்கு

அலுவலக நேரத்தில் வந்து உரியவர்கள் இவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும். (உ)

# விமானப்படை வீரருக்கு 10 வருட கடூழியச் சிறை

(கொழும்பு)

இளைஞர் ஒருவரைக்கத்தியால் குத்திக் கொலை செய்ததுடன், மேலும் மூவரைக் காயப்படுத்தியமை தொடர்பாக தனது குற்றத்தைஒப்புக்கொண்ட முன்னாள் விமானப்படை வீரர் ஒருவருக்கு10 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 4 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் கொகிலாவையைச் சேர்ந்த ஸ்டான்லிவிஜயதிலக றெருநாயக(வயது36) என்ற முன்னாள் விமானப் படை வீரருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (உ)

### சுற்றுலாத் துறையின்

# பின்னடைவுக்கான காரணங்கள் கண்டறிவு

(கொழும்பு)

சுற்றுலாத்துறையின் பின்னடைவிற்கான இரண்டு பிரதான காரணங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக புதிய சுற்றுலாத் துறையின் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் கட்டுநாயக்காவிமான நிலையத்தில் மேற்கொண்ட தாக்குதல், அமெரிக்க வர்த்தக நிலையங்கள் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல் சுற்றுலா பயண பின்னடைவுக்கான பிரதான காரணங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கான விமான சேவைகளின் வெளிநாட்டு நிலையங்கள் மூடப்பட்டமையும் இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார் (உ-7)

### பிரதேச செயலர்களூடாக

# முதியோர் அ.அட்டைகள் இனிமேல் வழங்கப்படாது

(யாழ்ப்பாணம்)

முதியவர்களுக்கான அடையாள அட்டைகளை, பிரதேச செயலர்கள் வழங்கும் நடைமுறை புதிய ஆண்டில் இருந்து நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது;

இதுவரை காலமும், 65வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான முதியோர் அடையாள அட்டைகள் மாகாண சமூகநலத்துறைத் திணைக்களத்தின் பணிப்புரையின் கீழ் சம்பந்தப்பட்ட பிரதேசசெயலர்களால்வழங்கப்பட்டபோதும்

ஜனவரிமுதலாம்திகதிமுதல் வடக்கு-கிழக்கு மாகாண சமூகநலத்துறையே அவற்றை வழங்கவுள்ளது; (உ)

### சட்டவிரோத

# மதுபான கடைகளுக்கு முத்திரையிட பணிப்பு

(கொழும்பு)

நாடுபூராகவும் உள்ள சட்டவிரோத மதுபானக்கடைகளை கண்டு பிடித்து முத்திரையிடுமாறு பொலிஸாருக்கு உள்விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க அறிவித்துள்ளார்.

சட்டவிரோதமான பல மதுபானக் கடைகள் நாடு பூராகவும் இயங்கிவருவதால் துஷ்பிரயோக செயல்கள் மற்றும், வன்செயல்கள் பெருமளவில் இடம்பெற்று வருவதாகவும்,

இதுபற்றிய அறிக்கையினை பொலிஸ்மா அதிபருக்கு தான் அனுப்பிவைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-7)

# கல்வி குப்பைத் தொட்டிக்குள்; புதிய கல்வி அமைச்சு குறித்து

## ஜே. வி. பி. அறிக்கையில் கடும் விமர்சனம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நிதிஅமைச்சுப்பதவியும் பாதுகாப்பு அமைச்சுப் பதவியும் தேசியப்பட்டியல்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கிய தன் மூலம் அவர்களை தனதுகைப்பொம்மையாக வைத்து தானே வழிநடத்தப் போகிறார் என்பது தெளிவாகத்தெரிகிறது. புதிய அரசாங்கத்தின்அமைச்சரவை நாய், காகங்களுக்குத் தானம் வழங்குவது போல்அமைந்துள்ளது என்று ஜே.வி.பியின் அரசியல் பீடம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை குறித்து விமர்சிக்கப்பட்டுள்ளமேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அந்தஸ்து இல்லாத அமைச்சர் பட்டியலில் கல்வி அமைச்சரும் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் அமைச்சரவைக்கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது அந்தளவிற்கு கல்வி கீழ்த்தரப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் தூணாகக் கருதப்படும் கல்வி குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டுள்ளது. மேலும் பாடசாலைக் கல்விதொடர்பாக வேறொரு அமைச்சரை நியமித்திருப்பதன் மூலம் பெரியகுழப்பமான நிலைஏற்பட்டுள்ளது. இப்படி பல குழப்பங்கள் புதியஅமைச்சரவையில் உள்ளன;

பொ ஐ; முன்னணியின்நிர்வாகத்திறமையற்ற ஆட்சியையும் 40 பேருக்கு மேற்பட்ட அமைச்சரவையையும் ஐ.தே; கட்சி முன்பு விமர்சித்தது இதை மக்கள் நம்பி ஒருமாற்றம் காணலாம் என்ற விருப்பத்தோடு ஐ.தே; கட்சிக்கு வாக்களித்தனர். ஆனால் அந்தக் கட்சியின் அமைச்சரவையில் மொத்தம் 62 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்;

ஐ;தே; கட்சி தமக்கு வாக்களித்த மக்களை கோமாளிகளாக்காது அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முனைய வேண்டும்; (எ)

## இன்று ஒரு தகவல்

# கல்வியில் கவனம்

படிக்கிற பிள்ளைகளுக்கு படிப்பைத் தவிர வேறு எதிலும் கவனம் செலுத்தக்கூடாது. அப்போது தான் படிப்பு நன்றாக வரும் இல்லையேல் வேறு சிந்தனைகள் தான் வரும்.

குருகுலத்தில் எப்படியெல்லாப் படித்தாங்கள் தெரியுமா?

யாக்ஞவல்கியரின் குருகுலத்திலே ஜனகர் படித்தார். ஜனகர் யார்? நாட்டின் ராஜா! 'அது தான் ராஜா ஆகிவிட்டோமே... இனி நமக்கு ஏன் படிப்பு?' என்று நினைக்கவில்லை அவர். கல்விக்கு எல்லை ஏது?

யாச்ஞவல்கியர், தினமும் ஜனகர் வந்து சேர்ந்த பின்னரே பாடங்களை ஆரம்பிப்பது வழக்கம்.

இது சில மாணவர்களுக்குப் பிடிக்கவில்லை.என்ன இது?

ஜனகர் ஒரு மன்னர் என்பதனால், அவருக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கிறார். என்று மனதினுள் நினைத்தார்கள். இவர்கள்மனதினுள் நினைப்பது குருவுக்கு தெரியும் ஏனெனில் அவருக்கு யோக சக்தி உண்டு.

குரு கவலைப்பட்டார்...! தன்னைப் பற்றி இவ்வாறு நினைக்கிறாங்களே என்பதற்காக இல்லை...! அவர்களுடைய கல்வியின் பலனை இவ்வாறான நினைவுகள் மூலம் இழந்துவிடுவார்கள் என்ற கவலை அவருக்கு!

ஒரு நாள் வகுப்பு நடந்து கொண்டிருந்தது! அவசர அவசரமாக சில பேர் ஓடி வந்தார்கள்! ''ஐயா! பட்டணம் தீப்பிடித்து எரிந்துகொண்டிருக்கிறது!'' என்றார்கள்.

இதைக் கேட்டவுடன் சில மாணவர்கள் துள்ளி எழுந்தார்கள். குருவிடம் சொல்லாமலேயே வெளியில் ஓடினார்கள். அங்கேகொடியில் காயப் போட்டிருந்த துணிகளை எடுத்து பத்திரப்படுத்தினார்கள். இவர்களைப் பார்த்து விட்டு இன்னும் சில பேரும் எழும்பி ஓடினார்கள். அரசே! அரண்மனையையும் நெருப்பு சூழ்ந்துள்ளது .. அங்கே உவளவர்களெல்லாம் தெருவில் இறங்கி ஓடிக்கொண்டிருந்தார்கள். சில பேர் நெருப்பில் கூட மாட்டிக்கொண்டார்கள்' என்று சொன்னார்கள்.

எல்லோரும் பதற்றப்பட்டார்கள். ஆனால் ஜனகர் மட்டும் கொஞ்சங் கூட சலனமடையவில்லை. குரு சொல்லிக் கொடுக்கும் பாடத்திலே மூழ்கியிருந்தார். முனிவரே ஜனகரைப் பார்த்து...

''உன்னுடையஅரண்மனையிலே தீப்புடித்துவிட்டதாம்!' என்று கூறினார். அந்த வார்த்தைகள் கூட ஜனகர் காதில் ஏறவில்லை. அந்தளவிற்கு பாடத்துடன் ஒன்றிப்போயிருந்தார். கல்வி என்றால் அதில் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

இக்காலத்து சிறுவன் ஒருவனிடம்பேசினேன் இக்கதையை அவனிடம் சொல்லி விட்டு கேட்டேன். ''நீ வீட்டில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கும் போது ஒருவன் ஓடி வந்து உங்களுடைய பாடசாலை தீப்பிடித்துவிட்டது'' என்றுசொல்கிறான். நீஉடனே என்ன செய்வாய் என்று கேட்டேன்.

''நானும் ஜனகர் மாதிரி தான் சார்! படித்துக் கொண்டே இருப்பேன், எழுந்து சென்று தீயை அணைக்க முயற்சி செய்ய மாட்டேன்'' என்றான்.

'ஏன் அப்படி? என்று கேட்டேன்.

'பாடசாலை எரிந்தால் தான் சார் எங்களுக்கு லீவு கிடைக்கும்!' என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நோர்வேயின் முயற்சிக்கு கனடா பூரண ஆதரவு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்தும் நோர்வே அரசின் முயற்சியை கனடா பூரணமாக ஆதரிக்குமென்று இலங்கைக்கான கனேடியத் தூதுவர் நுதாஜ்கோல்ட் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கலாசார மண்டபத்தில் சர்வதேசமனித உரிமைகள் தின நிகழ்வு இடம் பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே நுதாஜ்கோல்ட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத்தேர்தலில்மக்கள் சமாதானத்தை அடைய வேண்டுமென்ற ஆவலை வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சில் ஈடுபட வேண்டுமென்ற கனடாவின் விருப்பத்தை பதவியில் இருக்கும் புதிய அரசுக்கு கனடா வலியுறுத்தி வருகிறதென்று அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

# உப-சபா நாயகர் பதவியை ஏற்பதில்லை என முடிவு

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் பதவியை ஏற்றுக் கொள்வதில்லை என்றுபொது ஜன ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் கருஜெயசூரியா பிரதி சபாநாயகர் பதவிக்கு பொது ஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஒருவரைப் பிரேரிக்குமாறு கேட்டிருந்தார்.

இதனை அடுத்து பொது ஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவும் பிரதி சபாநாயகர் தொடர்பாக நீண்ட நேரம் விவாதித்த பின்னர் பிரதி சபாநாயகர் பதவியை ஏற்றுக்கொள்வதில்லை என தீர்மானித்துள்ளதாக முன்னாள் அமைச்சரும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளருமான டி. எம் ஜயரத்தின தெரிவித்துள்ளார். (வ)

## மலசலகூட வசதி

(மானிப்பாய்)

சாவற்காட்டு நாறுவீட்டுத் திட்டத்திற்குமலசலகூட வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்காக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு மலசலகூட உபகரணங்களையும்,15இலட்சம்பிதிநிதியையும்சாவற்காட்டு கடற்றொழிலாளர்கூட்டுறவுச் சங்கத்திடம் வழங்கியுள்ளது. (உ-120)

## வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு

# அமைச்சுப்பதவி தமிழர் ஒருவருக்கு வழங்காமைகுறித்துபுலிகள் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்குமாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு புனர்வாழ்வு, மீள்குடியமர்வு என்பனவற்றிற்கு பொறுப்பான அமைச்சு வழங்கப்படவேண்டும்என்று விடுதலைப்புலிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக தமிழ்க் கட்சியொன்றின்உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி விடயம் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனிடமிருந்து தமிழ்க்கட்சியொன்றிற்கு வழங்கப்பட்டு அக்கட்சி மூலம் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளதாக குறித்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு பதிலாக அப்பதவி தி. மகேஸ்வரனுக்கு வழங்கப்பட வேண்டுமென்று அதில் கேட்கப்பட்டுள்ளதாம்.

சிங்களவரான ஜயவர்த்தனாவிலும்பார்க்க யாழ்ப்பாணத் தமிழரான மகேஸ்வரன் விடுதலைப்புலிகளுடன் ஒத்துழைக்கக் கூடியவரென்று இலங்கைத் தமிழர்களுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப்பதவிகள் எதுவும் வழங்கப்படவில்லையென்றும் பொதுவாக அபிப்பிராயம் நிலவுவதாக தமிழ்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## உளவியல் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்தில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு உளவியல் கருத்தரங்கு ஒன்று இடம் பெறவுள்ளது.

தரிசனம் அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெறும் இந் நிகழ்வில் முதுமையை எதிர் கொள்ளல் என்ற தலைப்பில் டாக்டர் எஸ். சிவகுமார் கருத்துரை வழங்கவுள்ளார். (உ-19, 10)

## பாதாள உலக கும்பலைச்சேர்ந்த நபர் கைது

(கொழும்பு)

பாதாள உலக கும்பலுடன் தொடர்புடைய ஒருவரை கொழும்புவாழைத்தோட்டப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி நபர் விசாரணைக்குட்பட்டதில் 8 கொலைகளுடன் தொடர்புபட்டிருப்பதாகவும் அதில் 3 கொலைகள் கொழும்பு மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்குள் இடம் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## ஜனசக்தி திட்டம் மீண்டும் அமுல்

(கொழும்பு)

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில அமுல்படுத்தப்பட்ட ஜனசக்தி சுவர்ண பூமிதிட்டங்கள்தற் போதைய ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியிலும் அமுல்படுத்தப் படும் என்று புதிய போக்குவரத்து நெடுஞ்சாலைகள் விமானப் போக்குவரத்து அமைச்சர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார். (உ)

## சிறார்களுக்கு சத்துணவு

(மானிப்பாய்)

சாவற்கட்டுகடற்றொழிலாளர்கூட்டுறவுச்சங்கத்தின்அனுசரணையுடன் சாவற்காட்டில் இயங்கிவரும்பாலர் பாடசாலை சிறார்களுக்கு,இலவச சீருடை இலவச சாப்பாத்து, சத்துணவு என்பனவற்றை 2002ஆம் ஆண்டு ஜனவரி5 ஆம் திகதி வழங்குவதற்கு மேற்படி சங்கம் முன்வந்துள்ளது. (உ-120)

## தலைமயிரைக் கட்டையாக வெட்டியிருந்த இளம்பெண் கைது

(கொழும்பு)

தமைலயிரைக் கட்டையாக வெட்டியநிலையில்நடமாடிய இளம்பெண் ஒருவரும்அவரது தாயாரும் கல்முனை அட்டப்பள்ளம்என்றஇடத்தில்பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் தாயார் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும்17வயதுடைய துரைராஜா தவமணி என்ற மேற்படி பெண் அம்பாறை நாசகார தடுப்பு பொலிஸாரால் விசாரிக்கப்பட்டபின்னர் பதுளை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இக்கைதுதொடர்பாக கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதை அனுமதிக்கும் சட்டம்

(கொழும்பு)

பாராளுமன்றம் நாளை கூடியபின்பு, ஒரு குறுகிய காலத்தினுள் எம்.பிக்கள் கட்சிமாறுவதைஅனுமதிக்கும் சட்டம் கொண்டு வரப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பொ.ஐ.மு வின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தேசிய நல்லிணக்க அரசாங்கத்தில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதையடுத்து இத்தகைய ஒரு சட்டத்தை கொண்டுவருவதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. (உ)

## சாவகச்சேரிப் பகுதியில் பெருமளவு படையினர் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கடற்கரையை அண்டிய பகுதிகளில் உள்ள இராணுவக் காவலரண்கள புதுப்பிக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருவதுடன்,

அப்பகுதியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு பயிற்சியில் ஈடுபடுத்தப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இவை காரணமாக மீளக் குடியமர்ந்த மக்கள் மத்தியில் பயப்பீதி ஏற்பட்டுள்ளதுடன் எந்நேரமும் தாக்குதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்படலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது. (உ-10)

## விமானப்படை நடவடிக்கைகளில் பாரிய மாற்றங்கள்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத் தளம் மீதான தாக்குதலைத் தொடர்ந்து விமானப்படை நடவடிக்கைகளில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுளளதாக விமானப் படைத் தளபதி எயா வைஸ் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி தெரிவித்தார்.

மேற்படி விமானத்தளம் மீதான தாக்குதலுக்கான காரணங்களை ஆராயும் போது,ஒரு சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கு மற்றும் கவலையீனம் கண்டறியப்பட்டுள்ளதாகவும்,

இதனடிப்படையில் விமானப்படையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தவிரஏனைய விடயங்கான பொழுது போக்கு, விடுமுறை ஆகியவற்றிலும்தீவிரகண்காணிப்பு மேற்கொளளப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, விமானப் படை உயரதிகாரிகளால் எடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள், தாக்குதல் வியூகங்கள் தனக்கூடாகவே நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்தார். (உ)

## கரோல் ஆரம்பம்

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு,யாழ்.குடா நாட்டில் இரவு நேரங்களில் பரவலாக கரோல் ஆராதனைகள் இடம் பெற்று வருகின்றன.

இளைஞர்,யுவதிகள் ஆலய பங்குத்தந்தைகளுடன் இணைந்து இவ்வாறு கரோல் ஆராதனைகளை நடத்தி வருகின்றனர். (உ)

## சிந்தனைக்கு விருந்து

### காலன் பொறுப்பு ஈந்தான்

காலனின் நாட்டில் கணக்கற்றுப் பல்லுயிர்கள்
காலப் பெருகிடலேன்? சற்றோய்வு – காலன்
பெறக்கருதிப்போர்க்கருவி ஈவோர் கொல்வோர்க்(கு)
உறப்பொறுப் பீந்தான் உணர்.

-பழையவன்

## விளையாட்டு செய்திகள்

### மினி ஒலிம்பிக் பேராதனையில்
## யாழ்.பல்கலை மாணவர் 50 பேர் அங்கு பயணம்

(மானிப்பாய்)

யாழ்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 50 பேர் கொண்ட மாணவர் குழுவினர் இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையேயும் பேராதனையில் இடம்பெறவிருக்கும்மினி ஒலிம்பிக்' போட்டியில் பங்குபற்றுவதற்காக இன்று விமான மூலம் கொழும்பு செல்லவுள்ளனர்.

3 வருடத்திற்கு ஒரு முறை இடம்பெறும் இம் மினி ஒலிம்பிக் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்ட போதிலும் நாட்டுச்சூழ்நிலை காரணமாக இங்கு இடம்பெறாதது குறிப்பிடத்தக்கது. (உ-120)

### அகமதாபாத்
## 2 வது டெஸ்ட் போட்டி
### வெற்றி தோல்வி இன்றி முடிவு

(அகமதாபாத்)

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கிடையே அகமதாபாத்தில நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டிவெற்றி தோல்வி இன்றி முடிவடைந்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 407 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் கிரக்லைட் 121 ஓட்டங்களையும், டிரெஸ்கோர்திக் 99 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணி சார்பான பந்து வீச்சில் கும்ளே 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலிற்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் டெண்டுல்கா 103 ஓட்டங்களையும் லக்ஸ்மன் 79 ஓட்டங்களையும் பெற்றனர். இங்கிலாந்து அணி சார்பான பந்து வீச்சில் டவுசன் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இரண்டாவது இன்னிங்ஸில இங்கிலாந்து அணி 257 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும இழந்தது. இங்கிலாந்துஅணிசார்பாக மார்க் வூட்சர் 92 ஓட்டங்களையும் நாசர் உசைன் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணி சார்பான பந்து வீச்சில் கர்பஜன் சிங் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

352 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடத் தொடங்கிய இந்திய அணி, 3 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களையே பெறமுடிந்தது. தீபதாஸ் குப்தா 60 ஓட்டங்களையும் சிவசுந்தர்தாஸ் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதனால் ஆட்டம வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.

மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நாளை பெங்களூரில் நடைபெறவுள்ளது. (உ-2)

### "சம்பியன் சலஞ்"
## இந்திய அணி சம்பியன்

(கோலாலம்பூர்)

மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற ''சம்பியன் சலஞ்'' ஹொக்கிப் போட்டித் தொடரில் இந்திய அணி சம்பியனாகி உள்ளது.

இத தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணியும் தென்னாபிரிக்க அணியும் விளையாடின.

இதில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்று இந்திய அணி சம்பியனாகியது. இந்த வெற்றியின் மூலம அடுத்த வருடம ஜேர்மனியில் நடைபெறவுள்ள 'சம்பியன் ஸ்ரெவி போட்டித் தொடரில் விளையாடும்வாய்ப்பு இந்திய அணிக்குக் கிடைத்துள்ளது. (உ-2)

## அந்நிய செலாவணி மோசடி
### அசாருதீன், ஜடேஜா மீதான
## விசாரணை விரைவில்

[புதுடில்லி]

இந்திய கிரிக்கெட்அணியின் முன்னாள் வீரர்களான அசாருதீன் மற்றும் ஜடேஜா ஆகியவர்கள் அந்நிய செலாவணி மோசடியில் ஈடுபட்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளமை தொடர்பான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்திய அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள் இவ் விசாரணைகளை நடத்துவர்.

இவர்கள் இருவரும் மோசடியில் ஈடுபட்டதற்கான ஆதாரங்களை திரட்ட உயர் மட்ட அதிகாரிகள குழு லண்டன் மற்றும் தென்னாபிரிக்க நாடுகளுககு செல்லவுள்ளதாகவும்

இவ் விசாரணை அடுத்த வருடம் மே மாதத்துறகு முன் முடிவடைந்து விடும என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன் ஆட்ட நிர்ணய ஊழல் வழக்கில் சிக்கி இருவரும் தண்டனை பெற்றதும குறிப்பிடத்தக்கது. (உ-2)

## மாணவர் அமைப்பினால் பாகிஸ்தான் கொடி எரிப்பு

(சென்னை)

பாரதிய ஜனதாக் கட்சியின் மாணவர் அமைப்பைச் சேர்ந்த சிலர் பாகிஸ்தானின் கொடியை எரித்துள்ளனர்.

நேற்று, மதுரை அருகே இந்த மாணவர் அமைப்பைச் சேர்ந்த 12 பேர் கொடியெரிப்பில் ஈடுபட்ட வேளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் கொடியை எரிக்குமுன்னர் இந்திய நாடாளுமன்றத்தை தீவிரவாதிகள் தாக்கியதையும் உடனடியாக போடோ பயங்கரவாதச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று உரத்துக் கோசமிட்டனர். (து)

### வடக்கு கூட்டணியின் நம்பிக்கை வீணானது
## டோரா போரோவிலும்
# பின்லேடன் அகப்படவில்லை



(காபூல்)

ஒஸாமா பின்லேடனும்அவரது அல்கெய்டா அமைப்பும் கடைசியாக நிலைகொண்டிருந்த டோரோபோரோ பகுதிகள் கைப்பற்றப்பட்டுள்ள போதும் அங்குஒஸாமா பின்லேடன் இருப்பதற்கான தடயங்கள் எதுவும் தென்படவில்லையென வடக்கு கூட்டணிப் படைத் தளபதிகள் தெரிவித்துள்ளனர்

கடந்த வாரம் முதல் அமெரிக்க விமானங்களின் உதவியுடன் வடக்குக்கூட்டணியினர் முன்னேறி அப் பகுதிகளைதமது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவந்துள்ளனர்;

இத்தாக்குதல் நடவடிக்கைகளின்போது 200 அல்கெய்டா அமைப்பினர் கொல்லப்பட்டதுடன் 35 பேரை தாம் கைதுசெய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

டோரோபோரோ பகுதிகளுக்குள் தாம் தீவிரதேடுதல்களை மேற்கொண்டிருப்பதாகவும் உயிர் தப்பிய ஏனைய அல்கெய்டா போராளிகள்காடுகளுக்குள்ஓடி ஒளிந்துள்ளதாகவும் அவர்கள் மேலும்தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அண்மையில் ஒஸாமாபின்லேடன் தலிபான் வானொலியில் உரையாற்றியுள்ளமையானது.

அவர் இன்னமும் அப்பகுதிகளிலேயே தங்கியுள்ளமையை உறுதி செய்வதாக அமெரிக்கஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-5)

### அல்கெய்டா அமைப்புக்கு
## தஞ்சமளிக்கும் பொது மக்கள் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொலை

ஒஸாமா பின்லேடனின்அல் கெய்டா அமைப்பினருக்கு வீடுகளில் தஞ்சம் கொடுக்கும்ஆப்கான் பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்குக் கூட்டணிப்படைகளினதும் அமெரிக்க குண்டு வீச்சு விமானங்களினதும்தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாது தப்பியோடும் அல் கெய்டா அமைப்பினர் வீடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இவ்வாறு தஞ்சமடைபவர்களை கைது செய்து கொண்டு செல்வதுடன் அவர்களுக்கு தஞ்சமளித்தவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டு வருவதாக போராளிக் குழுவொன்று தெரிவித்துள்ளது.

இதனால் தப்பியோடும் அல் கெய்டா உறுப்பினர்களுக்கு தஞ்சமளிக்க ஆப்கான் பொது மக்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## கரும்பின் எதனோல் திரவத்துடன் பெற்றோல் கலக்கும் சிக்கன முறை
### இந்தியா அறிமுகம் செய்கிறது

(புதுடில்லி)

கரும்பிலிருந்து பெறப்படும் எதனோல திரவத்தைப் பெற்றோலுடன் கலந்து பாவிக்கும் முறையை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது

இச்செய்தியை வெளியிட்ட மத்திய மரபுசாரா எரிபொருள் மந்திரி கண்ணப்பன் இது குறித்து விளக்குகையில்; கரும்பிலிருந்து பெறப்படும் எதனோல் திரவத்தை பெற்றோலுடன் கலப்பதால் பெற்றோலின் தரம் குறையாதென்றும் இயந்திரங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோலுடன்எதனோல் திரவத்தைக் கலப்பதால் மலிவான விலைக்கு அதை விற்க முடியும் என்றும், அது விவசாயிகளுக்கு பெரும் நன்மை பயக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

இப்போது அரசு ஆண்டுக்கு 60 ஆயிரம் கோடி ரூபா பெற்றோலியப் பொருட்களுக்காகச் செலவு செய்து வருகிறது:

மேற்குறித்த முறை நடைமுறைக்கு வந்தால் இச் செலவு குறையும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார். (து)

## அ.இ.அ.தி.மு.கவுடன் கூட்டு என்றபேச்சுக்கே இடமில்லை
### பாரதிய ஜனதா அறிவிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் அ. இ அ.தி முகவுடன் கூட்டுச் சேர்வதென்ற பேச்சுக்கே இடமில்லையென்று பாரதியஜனதாக் கட்சியின் அகில இந்தியத் தலைவர் ஜனாக் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில், மத்திய அரசிற்கு மாறுபட்ட கட்சிகளை அரசுகள் அவ்வப்போது ஆதரவு தெரிவிப்பது வழக்கமென்றும்,

கொண்டுவரப்பட இருக்கும் போடோ சட்டத்துக்கு ஆதரவுதர முன்வந்ததால் அ. இ. அ. தி. முகவுடன் தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டு என்பது அர்த்தமல்ல என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை, திராவிட முன்னேற்றக் கழகத்துடனான கூட்டு தொடருமென்றும் தி.மு. க. சம்பந்தப்பட்ட விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் தெரிவித்தார். (து)

### அமெரிக்க - கியூபா
## வர்த்தகத் தொடர்புகள் மீண்டும் மலர்வு

(வாஷிங்டன்)

கியூபாவிற்கான வர்த்தகத் தொடர்பைசுமார் 39 ஆண்டுகளின் பின் அமெரிக்கா ஆரம்பித்துள்ளது.

இதன் முதற் கட்டமாக 50 தொன் இறைச்சியை ஏற்றிக் கொண்டு நேற்று முன்தினம் மாலை அமெரிக்க கப்பல் ஒன்று கியூபாவிற்கு புறப்பட்டுள்ளது;

கியூபாவிற்கான பொருளாதாரத் தடைகள் அமுல் படுத்துவது தொடர்பான சட்டம் தளர்த்தப்படுவதன் மூலம்தற்போது உணவுப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் மாத்திரமே அனுப்பிவைக்க சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது;

இதேவேளை, 1962 ஆம் ஆண்டு தொடக்கம் கியூபா மீது பொருளாதாரத் தடைகள் உட்பட பல தடைகளை அமெரிக்கா விதித்தமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## இந்து சாதனம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினரால் வெளியிடப்படும் 'இந்து சாதனம்' சஞ்சிகையின் நவம்பர்மாத இதழ்வெளியிடப்பட்டுள்ளது. (உ)

# உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறையாமல் பாதுகாக்கப்படுவதே ஆரோக்கியமாகும்

உற்ற நோய் நீக்கிஉறா அமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்

குறள்

===============

வலம்புரி

===============

## ஆறினால் பழங்கஞ்சி

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்கும் ஆணை பெற்று இன்றுடன் 13 நாட்கள் முடிவடைகின்றது. சமாதானப் பேச்சு என்ற ஒரே காரணத்திற்காகவே மக்கள் ஐ.தே.கட்சிக்குத் தமது வாக்குகளை வழங்கினர். தாம் ஆட்சிக்கு வந்தால் எதனை நடைமுறைப்படுத்துவோம் என ஐ.தே.கட்சியினர் கூறினரோ அதே விடயத்தை நிறைவேற்றுவதற்கு காலதாமதம் ஏற்படுமாயின் காவேரிதான் சிங்காரி, சிங்காரிதான் காவேரி என்பது போல் நிலைமை போய்விடும், விடுதலைப் புலிகளுக்கும், புதிய அரசுக்குமிடையே ஓர் சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமாயின் அஃது ஆட்சிப்பொறுப்பை ஏற்றகையோடு உருவாக வேண்டும்.

ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும்,விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பகையில்லாத உறவு ஆட்சிப் பீடமேறும் ஆரம்ப காலத்திலேயே இருக்க முடியும்.

அத்தகைய ஆரம்ப காலமே இருதரப்பும் புரிந்துணர்வுடன் செயற்படுவதற்குரிய தகுந்த காலமாகும். இத்தகைய காலத்தில் சமாதானப் பேச்சு என்பதற்கு முன்னதாக உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும்.

அவ்வாறு யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுமாயின் விடுதலைப் புலிகளும் அரசும் பகைத்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் தடுக்கப்படும்.

மாறாக ஐ.தே.கட்சி ஆட்சியைப் பொறுப்பேற்ற தொடக்கத்திலேயே யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளாவிடில், போர்முனைகளில் தினசரி இடம் பெறும் பரஸ்பர தாக்குதல் சம்பவங்கள்- புலிகளுக்கும்,ஐ.தே.கட்சி அரசுக்குமிடையிலான உறவை விரிசலடையச் செய்யும்.

யுத்த நிறுத்தமில்லாத சூழ்நிலையில் புலிகளின் தாக்குதலில் படையினரும், படையினரின் தாக்குதலில் புலிகளும் உயிரிழக்கவேண்டிய வாய்ப்புக்கள் அதிகரிக்கும் அதன் பின் இருதரப்புப் பகையும் உச்சநிலைக்கேறிவிடும்.

எனவே ஆறியகஞ்சி பழங்கஞ்சியென்பதுபோல் சரியான சந்தர்ப்பத்தை அரசு தவறவிட்டால் முடிவு யுத்தமே.

---

எயிட்ஸ் பற்றி உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) உட்பட பல்வேறுபட்ட சுகாதார அமைப்புகள் வரை பலஆய்வுகளை முடிவுகளை வெளியிட்டிருக்கின்றநிலையில், டாக்டர்சித்திக் ஜமால், டாக்டர் பஸ்லூர்ரஹ்மான் ஆகியோர் பமிலிஹெல்த்(Family Health)நூலில்எழுதி பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்திய கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

இக்கட்டுரையின் முதலாவது பிரசுரம் 27.11.2001 ந்திகதி வலம்புரியின் மருத்துவ விளக்கத்தில் பிரசுரித்த போது மருத்துவ நிபுணர்கள் பலர் அவ்வாக்கத்திற்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

எயிட்ஸ் பற்றிய சரியான முடிவுகளை உலக சுகாதார ஸ்தாபனம் கண்டறிந்துள்ள போதிலும், சில டாக்டர்களின் வாதப்பிரதி வாதங்களுக்கு இடமளித்து சரியான முடிவைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

சர்ச்சைக்குரிய இக்கட்டுரைக்கானஎதிர்ப்பை மருத்துவநிபுணர்கள் தரும் பட்சத்தில்அவைநிச்சயம் பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)

---

### எயிட்ஸ்

இன்றுபெரும்பரபரப்புடன் விளம்பரப்படுத்தப்பட்டுவரும் 'எய்ட்ஸ்'நோயை எடுத்துக் கொள்வோம்.

இன்றுவரை எய்ட்ஸ் நோய்க்கு சரியான காரணம் தெரியாது;

ஆனாலும்ஆராய்ச்சியாளர்கள், தாங்கள் ஆராய்ச்சிக்காகவே படைக்கப்பட்டவர்கள் என்பதைக் கீழ் நாட்டுமக்கள் மறக்கக்கூடாது என்பதற்காக இல்லாத ஒரு நோய்க்கு 'எய்ட்ஸ்' காரணங்களை அள்ளி வீச ஆரம்பித்திருக்கின்றனர்.

இம் மருத்துவ ஆய்வாளர்கள் கூறும் காரணங்கள் இதோ!

-முறையற்ற உடல் உறவு
-தகாத வழி உடல் உறவு
-போதை மருந்துகள்
-ஊசியை முறையாகச் சுத்தப்படுத்தாமல் உபயோகித்தல்
-இரத்தம் நோயாளி உடலில் செலுத்துவதன் மூலம்
-கடைசியாக எய்ட்ஸ் நோயை ஒரு வகை வைரஸ் கிருமிதான் ஏற்படுத்துகிறது என்றும்
-எய்ட்ஸ் நோய் முதன் முதல் தோன்றியது ஆப்பிரிக்காவில்தான் என்றும் மனித இனத்திற்கே தகாத பிரசாரங்களை செய்து வருகின்றனர்.

...லில் எதிர்ப்புசக்தி குறைந்து வரும் ஒரு நிலையில்! இந்த ஏழுவருடங்களும் உடலில் இவ்வளவு வீரியமிக்க ஒரு நோய் தலைதூக்க முடியாதபடி தடுத்தது உடலின் எதிர்ப்புசக்திதானே? அவருக்கு எதிர்ப்புசக்தி குறைந்து விட்டதென்றால் எப்படி? 'எயிட்ஸ்' என்பது உடலில் நோய் எதிர்ப்புசக்தி அழிந்து விடுவதன் காரணமாக ஏற்பட்டுள்ள நோய் (Acquired Immuno DeficiencySyndrome) என்று பொருள்பட பெயரிடப்பட்டுள்ளது.

### நோய் எதிர்ப்புச்சக்தி

உடலில 'எயிடஸ்' நோய்க் கிருமிகள் ஊடுருவி 5 முதல் 7 வருடங்களில்தான் அந் நோயின் வீரியம் தெரிய ஆரம்பிக்கிறது. அதுவரை உடலின் நோய் எதிர்ப்பு சக்திதான் நோய்க்கிருமிகளையும், அதன்வீரியத்தையும் கட்டுப்படுத்திஅடக்கி ஆண்டு இருக்கிறது.

இந்த 5 முதல் 7 ஆண்டு காலங்களும் இந்த 'எயடஸ்' கிருமிகள 'நோய்த்தடுப்பு ஊசிமருந்து' (Aids Vaccine) போல நமது உடலில் செயல்பட்டு வருகிறது. இதன் காரணமாகத்தான் நம்மில் பலபேர் எய்டஸ் கிருமிகள் இருந்தும் திடகாத்திரமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பெரும்பாலோர் 3 அல்லது 4 வருடத்தில் 'எய்டஸ்' நோயிலிருந்து தாமே குணமபெற்று விடுகின்றனர்!.

ஆக, நம உடலில் எதிர்ப்பு சக்தி இருப்பதால்தான் 3 அல்லது 4 வருடங்களுக்குள்ளாக நமது உடலில் 'எயிட்ஸ்' கிருமிகள் 'தடுப்பு ஊசிமருந்து' போல வேலைசெய்து 'எய்ட்ஸ்' அல்லது இதைவிட பயங்கரமானதும மிகக் கொடியதுமான (நாளைக் கண்டுபிடிக்கப்போகும்) எண்ணற்ற பல நோய்களிலிருந்தும் நாம் இன்றுவரை காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நமது உடலில் நோய்களுக்குப் பஞ்சமில்லை. அதைப்போன்றே நமது உடலில் நோய்க்கிருமிகள் இருக்குமவரை, அவை. நமது உடலில்உள்ள நோய் எதிர்ப்பு சக்தியால் கட்டுண்டு கிடக்கும்வரை உடல்நலத்திற்கும் தேக ஆரோக்கியத்திற்கும் குறைவில்லை.

எனவே புதிய நோய்களைக் கண்டுபிடிக்கிறோம் என்பது பொய்யானவை. அனைத்து நோய்களுக்கும் காரணம உடலின் 'நோய் எதிர்ப்பு சக்தி'யின். குறைவுதான்!

நோய் எதிர்ப்புசக்தி ஒரு மனிதனின் உடலில் குறையாமல் பாதுகாப்பதில்தான் ஒரு மனிதனின் முழுஆரோக்கியமும் அமைந்துளளது. நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியானது. உடலில் தோன்றியுளள நோய் எதிர்ப்புச்சக்தி ஒடுக்கப்படும் போது, இதன்மூலம் உடல் உபாதைகள் குறையும்போது. நோயின்தீவிரம்எந்தவிதமான எதிர்ப்பும் அற்ற நிலையில் வேகமாக வளர ஆரம்பிக்கிறது. ஆங்கில மருத்துவம் வளர்ச்சியடைவதற்கு முன்பாக நோய்கள் நோயை எதிர்த்து போரிடும் போது உடற்கூறுகளில் ஏற்படும் சலசலப்பை நாம் உடல் உபாதை

(→ 3ஆம் பக்கம் பார்க்க)

## டாக்டர் சித்திக ஜமால் டாக்டர் பஸ்லூர் ரஹ்மான்

உடனடி நிவாரணத்திற்காக அவ்வப்போது மாத்திரைகளை வாழ்நாள் முழுவதும் உட்கொள்ள நேரிடுகிறது. ஒவ்வொரு முறையும் மாத்திரைகளைச் சாப்பிடும் போது ஏற்படும் பக்கவிளைவுகளினால், கடுமையான வேதனைகளைக் கொடுக்கக்கூடியதாக உளளன.

குறைந்ததுஒருநூற்றாண்டு காலமாக மருந்துகளால் ஏற்படும் துயரங்களை வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு மனிதனும் அனுபவித்து வந்ததன் விளைவு? கர்ப்பப்பையில் வளர்ந்துவரும் சிசுக்களை கருச்சிதைவு செய்துள்ளது. எண்ணிலடங்காத பெண்களின் கர்ப்பப்பையைபலவீனப் படுத்தியுள்ளது. குறைப்பிரசவத்தை ஏற்படுத்தியுளளது. கல்லீரல், சிறுநீரகம், சிறுநீர்ப்பை கோளாறுகளை ஏற்படுத்தியுள்ளது. பிறவிக்கோளாறுகளை தோற்றுவித்துள்ளது. பிறக்கும் குழந்தைகளை அங்கவீனப்படுத்தியுள்ளது.

இருதய நோய்களுக்கென கொடுக்கப்படும் மருந்துகள் ஆண்மைக் குறைவையும், மலட்டுத்தன்மையையும் பக்க விளைவுகளாக ஏற்படுத்தும் கொடுமையை அனுபவித்து வருபவர்கள்!

மாற்று மருத்துவங்கள் மீது நம்பிக்கை கொள்ளவும் ஆரம்பித்து விட்டனர்.

உலகெங்கிலும் நம் நாட்டு மருத்துவங்களான ஆயுர்வேதம், இயற்கைமருத்துவம், யோகாசனம் போன்ற வைத்திய முறைகள் வேரூன்றஆரம்பித்து விட்டன.

ஏதேனும் ஒரு ஏழை, எளிய நாட்டை அடையாளம் காட்டி, இந்தநாட்டிலிருந்துதான் இந்த நோய் ஆரம்பித்துள்ளது என்று தன் பிரச்சார

## மருத்துவ விளக்கம்

பலத்தையும், பத்திரிகை பலத்தையும் கொண்டு உலகம் முழுவதும் பரப்பி மக்களை நம்ப வைப்பது.

பிறகு அந்நாட்டு மக்களையேஆராய்ச்சிக்குஎடுத்துக் கொண்டு பரிசோதனைகள் நடத்துவது இந்தஆராய்ச்சிகள் நோய்க்கிருமிகளைகண்டு பிடிப்பதற்காக அல்ல. வேறு புதிய பரிசோதனைக் கருவிகளைக் கண்டுபிடிப்பதற்காகவே காரணம் நோய்க் கிருமிகளென்று அவர்கள் கூறுவது வெறும் யூகங்களின் அடிப்படையில் தான்!

ஒருவர் நோய் என்று சொல்லும் போது உடம்பில் இன்ன இன்ன கஷ்டங்கள் இருக்கிறது என்கிறார். அடுத்துஇவை எப்படி ஏற்பட்டன; இந்த கஷ்டங்களுக்குக் காரணம் என்ன என்ற கேள்வி எழுகிறது. ஒரு நோய்க்கு காரணம் இதுதான் என்று தெரிந்தால் அதனையே அடிப்படையாக வைத்து ஒரு சாதாரண மருத்துவரால் வைத்தியம் ஆரம்பிக்க முடியும் ஒரு தேர்ச்சி பெற்ற மருத்துவர் நோயின் அறிகுறியைக்கொண்டே இந்த நோய் தான்என்பதை ஊகிக்கக்கூடியவராக இருப்பார். உடனடியாக நோயைக் குணப்படுத்தவும் செய்வார்.

### தெரிந்தவை பூச்சியம்

'எய்ட்ஸ்' பற்றிய மேலே சொன்ன உதாரணத்தைப் பாருங்கள்:

முதலாவதாக காரணம் கண்டு பிடிக்கப்படவில்லை என்பது நிதர்சனமான உண்மை. எய்ட்ஸ் என்று பெயரிட்டுப் பரப்பியுள்ளார்களே அந்த நோயைப் பற்றி யாவது முழுமையாகத் தெரியுமா? என்றால் சுத்தமாகப் பூஜ்யம். அந்நோயைப்பற்றி இவர்கள் தெரிந்து வைத்திருப்பது என்ன என்பதைப் பற்றி எடுத்துக்காட்ட ஒரே ஒரு உதாரணம்-.

'எயிட்ஸ்' கிருமிகள் உடலினுள் நுழைந்ததிலிருந்து மூன்றிலிருந்து ஏழு வருடங்களில் நோயின் தன்மைகளை உடலில் தோற்றுவிக்கும். இதில் ஆங்கில மருந்துவத்துக்குத் தெரியாதது என்னவென்றால், இவ்வளவு பயங்கரமான, தீவிரமான கிருமி ஏன் ஏழு வருடங்களுக்குப்பிறகு நோயைத் தோற்றுவிக்கிறது. அதுவும் நோயாளியின் உட...

---

## தினசரி தியானம்

## பொய் மான்

இகமுழுதும் பொய்யெனவே
ஏய்த்துணர்ந்தால் ஆங்க
மிகவளர வந்த அருள்
மெய்யே - அகநெகிழப்
பாரீர் ஒரு சொற் படியே அனுபவத்தைச்
சேரீர் அதுவே திறம்.

- தாயுமானவர்

பிரபஞ்ச வாழ்வு என்னும் பொய்மானைப் பார்த்து ஏமாந்து போகாதிருக்குமாறு பரம்பொருளே, நீ அருள் புரிவாயாக.

தவத்துக்காகக் காட்டுக்குச் சென்றிருந்த ஸ்ரீராமனும் சீதையும் சிறிது நேரம் பொய்மானுக்கு ஆசைப்பட்டார்கள். அந்த ஆசைக்கு இடங்கொடுத்ததால் அவர்கள் பெருந்துயரத்துக்கு ஆளானார்கள். மக்கள் எல்லோரும் படும் துயரத்துக்கு மூலகாரணம் பொறி வழியே அவர்கள் பிரபஞ்சப் பொருள்கள் என்னும் பொய்மானை நாடிச் செல்வதாம். அதைப் புறக்கணிக்குமளவு துன்பம் தவிர்க்கப்படும்.

-ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

### ஐ. தே. கட்சி

சாங்கம் பாடுபடுமானால் பொ. ஐ. முன்னணி பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

இதற்கு உதவ எந்தவிதமான சலுகைகளையோபதவிகளையோ கட்சி கோரமாட்டாது என்றும் தெரிவித்துள்ளது. [இ]

### அமைச்சுப்

உறுப்பினர்களோடு பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சியில், ஐ தே. முன்னணியின் பிரதித் தலைவர் கருஜெயசூரியா ஈடுபட்டுவருகின்றார். (இ)

# யுத்தத்தை உடனடியாக நிறுத்தி அரசு புலிகளுடன் பேச வேண்டும்

## தமிழ்க்கட்சி கூட்டமைப்புவலியுறுத்தும்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் புதிய அரசாங்கம் உடனடியாக யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி நாட்டில் சகஜநிலையை உருவாக்குவதற்கு நடவடிக்கைஎடுக்க வேண்டுமென்றும் நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு தலைவர்கள் ரணில்விக்கிரமசிங்காவை கோரியுள்ளனர்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புத் தலைவர்கள்இரா சம்பந்தன் கலாநிதி குமரகுருபரன் மற்றும் என்.கே.சிவாதிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை இரண்டொரு தினங்களில்சந்தித்துப் பேசவுள்ளனர்

இது தொடர்பாக தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் இரா. சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு தேர்தல்காலங்களில் கூறியதுபோல் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி நாட்டில் சகஜ நிலையை உருவாக்கி விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டும்.

இதில் எந்தவிதமான காலதாமதத்தையும் அரசுகாட்டக்கூடாதென்றும் தெரிவித்தார் (வ)

## பொலிஸ் உயர் பதவிகளில் திடீர் மாற்றம் வரலாம்

பொலிஸ் திணைக்களஉயர் பதவிகளுக்கு விரைவில் புதிய நியமனம் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் சிரேஷ்ட பொலிஸ்அத்தியேட்சகர்கள்உதவிப்பொலிஸ் அத்தியேட்சகர்கள் ஆகியோருக்குரிய நியமனங் தொடர்பில் மாற்றம் வரலாம் எனபொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு பிரிவு உளவுப் பிரிவு, பிராந்தியப் பொலிஸ் பிரிவு ஆகியவற்றிலும் மாற்றங்கள் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

### ரணிலின்

ஆனால் தற்பொழுது பதவியேற்பு முடிவடைந்த நிலையிலும் விடுதலைப்புலிகளுக்கு உத்தியோக பூர்வமாக பேச்சுக்கு வருமாறு ஐ. தே. கட்சியால் அழைப்பு விடுக்கப்படவில்லை.

இதேவேளை இந்தியாவுக்கு ராஜிய உறவைப் பலப்படுத்தும் வகையில் மந்திராலோசனை நடத்தச்செல்லும் ரணில் அங்கு இந்தியத் தலைவர்களுடன் இலங்கையின் இனபபிரச்சினை விவகாரம் குறித்து விரிவாக ஆராய்வார் என நம்பப்படுகிறது;

இதன்போது இந்தியத் தலைவர்களின் ஆசீர்வாதம் பெற்று இலங்கைக்கு திரும்பியதும் விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு ரணில்அழைப்பு விடுப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு ரணில் அழைப்புவிடுக்கும் போது அதற்கு முன்னேற்பாடாக போர்நிறுத்த அறிவிப்பும் வெளியிடுவாரென்றும்,

அதற்கு ஆதரவும் சமாதான சமிக்கையும் வெளிப்படுத்தும் வகையில் விடுதலைப்புலிகளும் போர் நிறுத்தத்தை அறிவித்து பேச்சில் ஈடுபட முன்வருவார்களெனவும். அரசியல் அவதானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் சமாதான முயற்சியை மேற்கொண்ட நோர்வே இம்முறையும் அம்முயற்சியில் தீவிரமாக ஈடுபடலாமெனவும் அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர். [இ]

## தேசிய அரசுக்கு ஆதரவு

ளனர்.

இந் நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக் குழு பரபரப்பான சூழ் நிலையில் இன்று கூடுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா தலைமையில் கூடவுள்ள இக் கூட்டத்தில் தேசிய நல்லிணக்க அரசு பற்றி முக்கியமாக ஆராயப்படும்.

இன்று நடைபெறும்இக்கூட்டத்தில தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது தொடர்பாக பொ.ஐ. முன்னணி சாதகமானதொரு முடிவை எடுக்காதபட்சத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவுவதற்கு வசதியாக கட்சித்தாவல் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எச்சரிக்கை விடுத்துள்ளார். அவரின் எச்சரிக்கையை அடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக் குழு நிதானமான முடிவுகளை மேற்கொள்ளாவிட்டால் அக்கட்சி பிளவுபடுவதை எவராலும் தடுத்துநிறுத்தமுடியாது என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)


### வலம்புரியின் ஆதரவுடன் அமரர் ஆ. கமலநாதன்

(உதவிக் கல்விப்பணிப்பாளர்)

அவர்களின் ஞாபகார்த்த சிறுகதைப்

## போட்டி முடிவுகள்

**முதலாம் பரிசு:-** தங்கப்பதக்கம்

திரு. செல்வராஜா மதிவதனன்
சரஸ்வதி வித்தியாசாலை வீதி
கரவெட்டி மேற்கு, கரவெட்டி
(தற்காலிக முகவரி:- திருகோணமலை)

**இரண்டாம் பரிசு:-** வெள்ளிப்பதக்கம்

செல்வி ச. குமுதினி
4ம் வருடம், மருத்துவபீடம்
யாழ் பல்கலைக்கழகம்

**மூன்றாம் பரிசு:-** பணப்பரிசு

செல்வி செ. பவானி
இல: 20, பீ. ஏ. தம்பிலேன்
வண்ணார்பண்ணை

**பாராட்டும் சான்றிதழும் பெறுவோர்:-**

- ★ செல்வி கிருஷாந்தி விஸ்வலிங்கம், ஐயனார் கோவிலடி, கொக்குவில் மேற்கு
- ★ செல்வி ஆரபி இ. ஞானராஜா, மாதாகோவிலடி, அம்பலவாணர்வீதி, உடுவில்
- ★ திரு. சிதம்பரப்பிள்ளை கதிர்காமநாதன், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்
- ★ திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கம், கொக்குவில் மேற்கு, கொக்குவில்
- ★ திருமதி பங்கயமலர் பஞ்சலிங்கம், புனித செபஸ்ரியன் வீதி, கோண்டாவில்கிழக்கு
- ★ செல்வி சாரங்கா சதாசிவமூர்த்தி, பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி
- ★ திரு. இராஜசுந்தரம் முரளிதரன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

**சிறுகதைப் போட்டியின் நடுவர்களாகக் கடமையாற்றி எமது நன்றிக்கு உரித்தான அறிஞர்கள்**

திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி)
(ஓய்வு பெற்ற அதிபர், எழுத்தாளர்)

திரு. ஏ. ஜே. கனகரத்னா
(பத்திரிகையாளர், முன்னாள் ஆங்கிலப் போதனாசிரியர் யாழ்பல்கலைக் கழகம்)

திருமதி அ. சண்முகானந்தன்
(அதிபர்; தேசிய கல்வி நிறுவக பகுதி நேர விரிவுரையாளர்)

**பரிசளிப்பு:-** 20.12.2001 இல் நடைபெறும் வலம்புரியின இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில் இடம் பெறும.

நன்றி

ஆசிரியர் பீடம்
வலம்புரி

கவிஞர் சு. துரைசிங்கம்
பொறுப்பாசிரியர்
கமலநாதன் ஞாபகார்த்த
சிறுகதைப் போட்டி



### எம் இனிய தமிழ் மக்களே!

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் பற்றிய அபிப்பிராயங்களை என்றும் எம் அன்புக்குப் பாத்திரமாக இருக்கும் பொது மக்களாகிய உங்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகின்றோம்.

எனவே தேர்தல் பற்றிய அபிப்பிராயங்களையும் எமது கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள், பற்றிய தங்களது கருத்துக்களையும் தபால் மூலமாக,

'மாவட்டத் தலைமைச் செயலகம்'
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
இல 273, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே. வி. குகேந்திரன் (ஜெகன்)
முன்னாள், பாராளுமன்ற உறுப்பினர்
பிரதம அமைப்பாளர்
ஈ. பி. டி. பி. யாழ்மாவட்டம்.

(கி-3054)



தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்



## நிருத்திகா ஜுவலர்ஸ்

(கி-2367)

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P. 021- 2694


இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.